ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2023.08.24 |

**நாணயக்கொள்கை மீளாய்வு: இல. 06 - 2023 ஓகத்து**

**இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுகின்றது**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2023 ஓகத்து 23ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 11.00 சதவீதம் மற்றும் 12.00 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளின் கவனமான பகுப்பாய்வு மற்றும் 2023 யூனிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நாணய நிலைமைகளின் குறிப்பிடத்தக்க தளர்வடைதலினையும் தொடர்ந்து சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டது. இதுவரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நாணயக்கொள்கை தளர்வடைதல் வழிமுறைகளிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் சந்தை வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கத்தினையும் சந்தை வட்டி வீதங்களை மேலும் சீராக்குவதற்கு விரைவாக இடமளிப்பதற்கான தேவைப்பாட்டினையும் நாணயச்சபை கருத்தில் கொண்டது. இருப்பினும், குறித்த சில கடன்வழங்கல் உற்பத்திகளின் சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் விஞ்சியளவில் காணப்படுவதனையும் அவை தற்போதைய நாணயக்கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்திலமையவில்லை என்பதனையும் சபை அவதானித்தது. மேலும், அண்மைய நாணயக்கொள்கை தளர்வடைதல் வழிமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் விரைவான வீழ்ச்சியினை சபை எதிர்பார்க்கின்றது. இதற்கமைய, விஞ்சியளவில் காணப்படக்கூடிய குறித்த சில கடன்வழங்கல் வட்டி வீதங்களைக் குறைப்பதற்கும் எதிர்வருகின்ற காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகள் பொருத்தமான அளவினால் ஒட்டுமொத்த ரூபாய்க் கடன்வழங்கல் வட்டி வீதங்களைக் குறைப்பதனை நெறிப்படுத்துவதற்கும் இலக்கிடப்பட்ட நிர்வாக வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குச் சபை தீர்மானித்தது.

**பணவீக்க வீழ்ச்சிப் போக்கு தொடர்வதுடன் முதன்மைப் பணவீக்கமானது ஒற்றை இலக்க மட்டங்களை அண்மிக்கின்றது**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கமானது 2023 யூலையில் 6.3 சதவீதத்திற்குக் குறைவடைந்து, 2021 நவெம்பர் மாதத்திலிருந்து முதலாவது தடவையாக ஒற்றை இலக்க மட்டத்தை அண்மித்தது. ஒத்த போக்காக, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமும் 2023 யூலையில் 4.6 சதவீதத்திற்கு (ஆண்டிற்கு ஆண்டு) குறைவடைந்தது. முதன்மைப் பணவீக்கத்தின் மிதமடைதலானது சாதகமான புள்ளிவிபரத் தளத்தாக்கத்துடன் இணைந்து வலு மற்றும் உணவுப் பணவீக்கத்தின் மென்மையாக்கத்தினால் முக்கியமாக உந்தப்பட்டது. அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைக் கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பவற்றின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது 2023 யூலையில் முறையே 6.1 சதவீதத்திற்கும் 6.3 சதவீதத்திற்கும் (ஆண்டிற்கு ஆண்டு) மிதமடைந்தது. முதன்மைப் பணவீக்கமானது அடுத்த சில மாதங்களில் மேலும் மிதமடையுமென்பதுடன்

நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்க மட்டங்களை அண்மித்து உறுதிநிலைப்படுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**

**கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு, சதவீதம்)**




*குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான உண்மையான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் கிடைப்பனவாகவுள்ள சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன. மேலுள்ள வீச்சு வரைபடமானது 2023 யூலை மாத நாணயக்கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட நடுத்தர கால எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது. வீச்சு வரைபடம் மற்றும் நடுத்தர கால எறிவுகள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2023 கா2 இற்கான மொ.உ.உற்பத்தி தரவுகளின் வெளியீட்டுடன் இணைந்து 2023 ஒத்தோபரில் அடுத்த நாணயக்கொள்கைச் சுற்றில் இற்றைப்படுத்தப்படும்.

*மூலம்: மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்*

*வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது.*

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2023 யூலை எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்களை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. 2023 யூலை மாத எதிர்வுகூறல் சுற்றில் நிலவிய உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி அலுவலர் மட்ட அறிக்கையுடன் இசைந்து செல்லும் விதமாக எதிர்பார்க்கப்படுகின்ற இறைப் பாதை, ஐக்கிய அமெரிக்காவின் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீத பாதை மற்றும் தோற்றம்பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் மற்றும் நடுத்தர கால இறை இலக்குகளின் அடைவு என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ் ஊகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து உண்மையான பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில், தற்போதைய எறிவுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். வேளாண்மை உற்பத்தி மீதான பாதகமான வானிலையின் தாக்கம் மற்றும் அதன்மூலம் ஏற்படக்கூடிய உணவுப் பணவீக்கம், அதிகரித்துச்செல்கின்ற உலகளாவிய எண்ணெய் மற்றும் பண்ட விலைகளினால் உந்தப்பட்டு உள்நாட்டு விலைகளுக்கான சாத்தியமான மேல்நோக்கிய திருத்தங்கள், எதிர்பார்க்கப்படுகின்ற இறைத் திரட்சிப் பாதையிலிருந்தான ஏதேனும் விலகல், இறக்குமதித் தளர்வுகளிற்கு மத்தியில் சாத்தியமான செலாவணி வீத பெறுமானத் தேய்மானம் மற்றும் கூலிப் பணவீக்கத்தின் சாத்தியக்கூறு என்பன உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளிலிருந்து பணவீக்க எறிவுகளிற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் தோற்றம்பெறுகின்றன. அதேவேளை, ஏனையவற்றிற்கிடையில், நிரம்பல் நிலைமைகள் மற்றும் இறக்குமதித் தளர்வுகள் என்பன மேலும் இயல்புநிலைக்குத் திரும்புதலின் மூலம்

உந்தப்பட்டு பொருளாதாரத்தின் விரைவான மீட்சிக்கான சாத்தியப்பாடு மற்றும் பொதுமக்களின் குறைவடைந்து செல்கின்ற கொள்வனவு சக்தியின் நிலையான தாக்கம் என்பவற்றினை பணவீக்க எறிவுகளிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் உள்ளடக்கின்றன.

பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான ஏதேனும் மாற்றங்கள் பற்றி கிரமமான அடிப்படையில் பொது மக்களுக்குத் தொடர்பூட்டி விபரமறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது.

**உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையானது 2023இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் மீட்சியடைந்து, நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சியின் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மட்டத்தினைப் படிப்படியாக அண்மிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது**

நாணய நிலைமைகள் இயல்புநிலைக்குத் திரும்புதல், வியாபார நம்பிக்கையில் முன்னேற்றங்கள், வழங்கல் நிலைமைகளின் மேம்பாடுகள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்வு மற்றும் வளர்ச்சியினை ஊக்குவிக்கின்ற கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களின் தாக்கம் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, பொருளாதார நடவடிக்கையானது 2023இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் படிப்படியாக மீட்சியடையுமெனவும் அதன்பின்னர் அதன் உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மட்டத்தினை அண்மிக்குமெனவும் எறிவுசெய்யப்பட்டுள்ளது. பொருளாதார நடவடிக்கையின் முன்கூட்டிய குறிகாட்டிகள் முன்னைய எறிவுகளுடன் ஒப்பிடுகையில் 2023இன் இரண்டாம் காலாண்டில் மொ.உ.உற்பத்தியில் தாழ்ந்தளவிலான சுருக்கமொன்றினைக் குறித்துக்காட்டிய வேளையில், 2023இன் இரண்டாம் அரையாண்டானது 2022இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சாதகமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகளின் தாக்கம் மற்றும் மிதமான வெளிநாட்டுக் கேள்வி நிலைமைகள் என்பன குறுங்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சி மீது பாதிப்பினை ஏற்படுத்தக்கூடும்.

**வெளிநாட்டுத் துறையானது தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருப்பதுடன் சென்மதி நிலுவைக் கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்த்தலொன்றினை அனுமதிக்கின்றது**

வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் குறைவிற்கு மத்தியிலும் வணிகப்பொருள் இறக்குமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்கதொரு குறைவுடன் 2023 யூலையில் முடிவடைகின்ற ஏழு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து காணப்பட்டது. முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரி தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியில் கணிசமானளவில் மேம்பட்டுக் காணப்பட்ட சுற்றுலாத் துறையிலிருந்தும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்துமான வருவாய்கள் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் மேலும் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான அண்மைய சில வெளிப்பாய்ச்சல்களிற்கு மத்தியில், தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2023 யூலையில் முடிவடைகின்ற ஏழு மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் சாதகமாக காணப்பட்டன. சென்மதி நிலுவை நிலைமைகளின் மேம்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கான தேவைப்பாடு என்பவற்றைக் கருத்திற்கொண்டு, 2023 யூனிலிருந்து வர்த்தக நோக்கிலான ஊர்திகள் உள்ளடங்கலாக 638 இணங்குவிப்பு முறைமைக் குறியீடுகளுடன் தொடர்புடைய இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கணிசமானளவிலானதொரு பங்கு ஏற்கனவே தளர்த்தப்பட்டுள்ள போதிலும், இறக்குமதிகளுக்கான கேள்வி தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்படுகின்றமையானது இறுக்கமான நிதியியல் நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றது. ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபா ஏறத்தாழ 12 சதவீத உயர்வொன்றினைப் பதிவுசெய்தது. சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக 2023 யூலை

இறுதியிலுள்ளவாறாக மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டமானது ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.8 பில்லியனாக மதிப்பிடப்பட்ட வேளையில், பல்புடைக் கடன்வழங்கல் முகவராண்மைகளின் முதிர்ச்சியடைகின்ற படுகடனின் மீள்கொடுப்பனவுகளுடன் வங்களாதேச வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதியின் பகுதியொன்றினை மீளக்கொடுப்பதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**சீராக்கங்களில் சமமின்மைகள் தொடர்ந்து காணப்படுகின்றன போதிலும் சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் கீழ்நோக்கிச் சீராக்கப்படுகின்றன**

2023 யூன் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக்கொள்கை தளர்வடைதல் வழிமுறைகளின் தாக்கம் மற்றும் உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகைத் தொழிற்பாட்டு அறிவிப்புடன் இடர்நேர்வு மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் குறிப்பிட்டளவிற்கு வீழ்ச்சியடைந்துள்ளன. அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களில் குறிப்பிடத்தக்கதொரு குறைவும் பதிவுசெய்யப்பட்டது. இருப்பினும், சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய சீராக்கமானது சந்தை வைப்பு வட்டி வீதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறைவிற்கு விகிதாசாரமற்ற முறையிலமைந்துள்ளன. மேலும், நாணய நிலைமைகளின் கணிசமானளவிலான தளர்வடைதலிற்கு மத்தியில், சில நிதியியல் நிறுவனங்களின் குறித்த சில கடன்வழங்கல் உற்பத்திகள் மீதான வட்டி வீதங்கள் தொடர்ந்தும் விஞ்சியளவில் உயர்வடைந்து காணப்படுகின்றமையானது தனிநபர்களுக்கும் வியாபாரங்களிற்கும் குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளிற்கு சிரமங்களை ஏற்படுத்துகின்றது. 2023 ஓகத்து மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து நியதி ஒதுக்கு விகிதத்தின் குறைப்பானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை அழுத்தங்களைத் தளர்வடையச்செய்யுமெனவும் அவற்றின் நிதிச் செலவினைத் குறைவடையச்செய்து கடன்வழங்கல் வட்டி வீதங்களில் மேலதிக கீழ்நோக்கிய சீராக்கத்திற்கு துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, 2023 யூலை வரை கிடைப்பனவாகவுள்ள தரவுகளின் அடிப்படையில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் நிலையானதொரு மீட்சி இதுவரை அவதானிக்கப்படவில்லை. ஆகையால், மத்திய வங்கியின் தளர்வடைந்த நாணயக்கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதியியல் நிறுவனங்களினால் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதானது அத்தியாவசியமானதொன்றாகக் காணப்படுவதுடன் அதன்மூலம் பொருளாதாரத்திற்கான கொடுகடன் பாய்ச்சல்களை அதிகரிக்கச்செய்து பொருளாதார நடவடிக்கையின் மீளெழுச்சிக்குத் துணைபுரியக்கூடும்.

**கொள்கை வட்டி வீதங்கள் அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்ற வேளையில், சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் குறைவினைத் துரிதப்படுத்துவதற்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2023 ஓகத்து 23ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 11.00 சதவீதம் மற்றும் 12.00 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவது பொருத்தமென அபிப்பிராயப்பட்டது. முக்கிய கொள்கை வட்டி வீதங்களை 2023 யூன் முற்பகுதியிலிருந்து 450 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்த வேளையில் நிதியியல் சந்தைகளிற்கு மேலதிக திரவத்தன்மையினை உட்செலுத்தும் பொருட்டு நியதி ஒதுக்கு விகிதத்தினை 2.0 சதவீத புள்ளிகளினால் குறைத்து மத்திய வங்கி அதன் நாணயக்கொள்கை நிலைப்பாட்டினைக் கணிசமானளவில் தளர்வடையச் செய்துள்ளதனை உறுப்பினர்கள் குறித்துக்காட்டினர். மேலும், உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை உபாயத்தின் அறிவிப்பானது ஏனைய

சந்தை வட்டி வீதங்களிற்கான கசிவுத்தாக்கங்களுடன் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களின் இடர்நேர்வு மிகையினைக் குறைப்பதற்கும் துணைபுரிந்தது. இருப்பினும், குறித்த சில கடன்வழங்கல் உற்பத்திகள் மீது விஞ்சியளவிலான வட்டி வீதங்கள் காணப்படுவதனையும் வைப்புக்களுடன் ஒப்பிடுகையில் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கத்தின் போதாமையையும் கருத்திற்கொண்டு, குறித்த சில நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய இறுக்கமானதன்மையானது நிர்வாக வழிமுறைகளினூடாகத் தீர்க்கப்பட வேண்டுமென சபை அபிப்பிராயப்பட்டது. அத்தகைய நிர்வாக வழிமுறைகள் பொருளாதாரத்தின் சகல துறைகளிற்கும் முன்னைய நாணயக்கொள்கை தளர்வடைதல் வழிமுறைகளின் விரைவான ஊடுகடத்தலினையும் நிச்சயப்படுத்தும். இதற்கமைய, சகல உரிமம்பெற்ற வங்கிகளிற்கும் அடகு பிடித்தல் வசதிகள் மீது ஆண்டிற்கு 18 சதவீதம், முன்கூட்டி ஏற்பாடுசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மீது ஆண்டிற்கு 23 சதவீதம் மற்றும் கடனட்டைகள் மீது ஆண்டிற்கு 28 சதவீதம் என்றவாறு வட்டி வீதங்கள் மீது உச்ச வரம்பினை விதிப்பதற்குச் சபை தீர்மானித்தது. மேலும், தண்ட வட்டி வீதங்கள் தொடர்புடைய கொடுகடன் வசதி மீது அறவிடப்படுகின்ற கிரமமான வட்டி வீதங்களில் 2 சதவீத புள்ளிகளில் எல்லையிடப்படப்பட வேண்டுமென சபை அபிப்பிராயப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, ரூபாய் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான ஏனைய சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களும் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேலும் கீழ்நோக்கிச் சீராக்கப்பட வேண்டுமென சபை குறித்துக்காட்டியது. இவ்வொழுங்குமுறைப்படுத்தப்பட்ட வட்டி வீதங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பணிப்புரைகள் விரைவில் வெளியிடப்படும். ஒட்டுமொத்த கடன்வழங்கல் வட்டி வீதக் கட்டமைப்பானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் மத்திய வங்கியின் நாணயக்கொள்கை வழிமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தொடர்ந்தும் காணப்படுவதனை நிச்சயப்படுத்தும் பொருட்டு இப்பணிப்புரைகள் மேலும் மீளாய்விற்குட்படுத்தப்படும்.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதம் மாற்றமடையவில்லை** | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 11.00% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 12.00% |
| | நியதி ஒதுக்கு விகிதம் | 2.00%* |

*2023 ஓகத்து 16 தொடக்கம் நடைமுறையில்

| | | |
|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வட்டி வீதங்கள்** | **உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் (ஆண்டிற்கு)** | |
| | அடகு பிடித்தல் வசதிகள் | 18.00% |
| | முன்கூட்டி ஏற்பாடுசெய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் | 23.00% |
| | கடனட்டைகள் | 28.00% |
| | கிரமமான வட்டி வீதங்கள் மீதான தண்ட வட்டி வீதங்கள் | 2.00 சதவீத புள்ளிகள் |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2023 ஓகத்து 24ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றின் வாயிலாக நேரலையாக ஒளிபரப்பப்படும்.

நாணயக் கொள்கை மீளாய்வு மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2023 ஒத்தோபர் 05ஆம் நாளன்று வெளியிடப்படும்.

## இணைப்பு I

### அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | நவெ 22 | திசெ 22 | | சன 23 | பெப் 23 | மாச் 23 | ஏப் 23 | மே 23 | யூன் 23 | யூலை 23 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 61.0 | 57.2 | கொநுவிசு (2021=100) | 51.7 | 50.6 | 50.3 | 35.3 | 25.2 | 12.0 | 6.3 |
| | தேநுவிசு (2013=100) | 65.0 | 59.2 | தேநுவிசு (2021=100) | 53.2 | 53.6 | 49.2 | 33.6 | 22.1 | 10.8 | 4.6 |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 49.4 | 47.7 | கொநுவிசு (2021=100) | 45.6 | 43.6 | 39.1 | 27.8 | 20.3 | 9.8 | 6.1 |
| | தேநுவிசு (2013=100) | 60.1 | 57.5 | தேநுவிசு (2021=100) | 52.0 | 50.1 | 44.2 | 31.8 | 21.6 | 11.3 | 6.3 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: நாணயத்துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நவெ 22 | திசெ 22 | சன 23 | பெப் 23 | மாச் 23 (அ) | ஏப் 23 (அ) | மே 23 (அ) | யூன் 23 | யூலை 23 |
| ஒதுக்குப் பணம் | 1,318 | 1,349 | 1,590 | 1,505 | 1,424 | 1,417 | 1,559 | 1,436 | 1,374 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 12,163 | 12,290 | 12,322 | 12,346 | 12,293 | 12,387 | 12,307 | 12,517 | 12,726 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (1,870) | (1,767) | (1,573) | (1,434) | (1,174) | (1,039) | (838) | (808) | (707) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 14,033 | 14,056 | 13,895 | 13,780 | 13,467 | 13,426 | 13,144 | 13,325 | 13,433 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 7,293 | 7,471 | 7,612 | 7,471 | 7,568 | 8,091 (ஆ) | 8,111 | 8,261 | 8,549 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான/ அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் | 1,760 | 1,747 | 1,748 | 1,712 | 1,605 (இ) | 1,147 (ஆ)(இ) | 1,084 (இ) | 1,096 | 1,097 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 7,499 | 7,414 | 7,318 | 7,260 | 7,141 (இ) | 7,093 (இ) | 7,004 (இ) | 7,080 | 7,093 |
| விரிந்த பணம் ($M_4$) | 14,676 | 14,840 | 14,891 | 14,906 | 14,868 | 14,981 | 14,885 | 15,094 | - |

(அ) 2023 மாச்சு தொடக்கம் ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கு எதிராக இலங்கை ரூபாவின் உயர்வடைதலானது அக்காலப்பகுதியில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் மிதமடைதலிற்கு முக்கியமாகப் பங்களித்தது.

(ஆ) 2023 சனவரி 30 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பெறப்பட்ட அமைச்சரவை ஒப்புதலுடன், அரசிற்குச் சொந்தமான தேர்ந்தெடுக்கப்பட்ட வியாபாரத் தொழில்முயற்சிகளின் ஐந்தொகைகளை மீள்கட்டமைப்பதற்குப் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடனானது 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய அரச படுகடனினுள் ஈர்த்துக்கொள்ளப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கத்தின் ஒரு பகுதி 2023 ஏப்பிறலில் நிறைவேற்றப்பட்டதுடன் அரசிற்குச் சொந்தமான குறித்த வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் இது பிரதிபலிக்கப்பட்டது. மேலும், இது அரச கூட்டுத்தாபனங்கள்/ அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிற்கான கொடுகடனில் குறைப்பொன்றினையும் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் விரிவாக்கமொன்றினையும் தோற்றுவித்தது.

(இ) திருத்தப்பட்டது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

### அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | பெப் 23 முடிவில் | மாச் 23 முடிவில் | ஏப் 23 முடிவில் | மே 23 முடிவில் | யூன் 23 முடிவில் | யூலை 23 முடிவில் | 23 ஓகத் 2023இல் உள்ளவாறாக |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 14.50 | 15.50 | 15.50 | 15.50 | 13.00 | 11.00 | 11.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 15.50 | 16.50 | 16.50 | 16.50 | 14.00 | 12.00 | 12.00 |
| **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம்** | 15.27 | 16.49 | 16.50 | 16.50 | 13.85 | 11.50 | 11.54 |
| **திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 29.72 | 25.99 | 25.74 | 25.65 | 23.00 | 19.96 | 17.97 |
| 182-நாள் | 28.67 | 25.79 | 25.27 | 25.29 | 19.49 | 17.69 | 15.03 |
| 364-நாள் | 27.67 | 24.31 | 23.00 | 22.91 | 16.99 | 14.29 | 13.31 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 23.45 | 21.40 | 21.03 | 20.29 | 19.47 | 17.18 | 16.02 (ஆ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 18.50 | 18.29 | 17.87 | 17.75 | 17.51 | 16.90 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 25.31 | 23.70 | 23.09 | 22.39 | 21.51 | 19.30 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 14.74 | 15.06 | 15.12 | 15.23 | 15.09 | 14.76 | 14.15 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 19.23 | 19.80 | 19.72 | 19.84 | 19.70 | 19.02 | 18.26 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 21.56 | 20.48 | 19.19 | 18.85 | 14.98 | 12.45 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 22.06 | 21.07 | 19.70 | 19.19 | 15.49 | 12.76 | - |

(அ) *2023 ஓகத்து 18இல் முடிவடையும் வாரத்திற்கானது*

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*